அடையாள இலக்கம்

B ☐ ☐ ☐ ☐ ☐ ☐

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2021

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## மத்திய பிரிவு

(8 – 9 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**அ). பொருத்தமான ஒரு எழுத்தைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.** (10 புள்ளிகள்)

| | |
|---|---|
| 1 தீபாவ ______ | 6. மாக் ______ லம் |
| 2 ம _____ லிகைப்பூ | 7. தண் _____ ர் |
| 3 மன்னிக்க ______ ண்டும் | 8 கொழுக் ______ ட்டை |
| 4 மலர்க்கொத் ______ | 9 நகரம ______ டபம் |
| 5 கால்விர ______ கள் | 10 சி ______ லப்பதிகாரம் |

**(ஆ) கீழே தரப்பட்ட ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்களை எழுதுக.** (10 புள்ளிகள்)

1. காப்பு - ______________________________
2. மாணவன் - ______________________________
3. கல் - ______________________________
4. மரம் - ______________________________
5. இது - ______________________________

**(இ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.** (10 புள்ளிகள்)

**குறிப்பு** : சரியான விடையினைக் கோடிட்ட இடத்தில் எழுதாதவர்களுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது.**

1. நாம் பெரியோரின் ____________________ கேட்டு நடக்க வேண்டும்.
   அ) அறிவுரையைக் ஆ) அறிவுரையோடு
   இ) அறிவுரையால் ஈ) அறிவுரைக்கு

2. நல்ல ____________________ ஆசிரியர் பாராட்டினார்.
   அ) பிள்ளைகளை ஆ) பிள்ளைகளுக்கு
   இ) பிள்ளைகளின் ஈ) பிள்ளைகளே!

3. ____________________ இலைகள் உதிர்ந்தன.

அ) மரம் ஆ) மரத்துக்கு

இ) மரத்தில் ஈ) மரத்திலிருந்து

4. குருவி தன் ____________________ இரை தேடியது.

அ) குஞ்சுகள் ஆ) குஞ்சுகளை

இ) குஞ்சுகளுக்கு ஈ) குஞ்சுகளிடமிருந்து

5. மாலையில் நான் என் ____________________ சேர்ந்து விளையாடுவேன்.

அ) நண்பன் ஆ) நண்பனுக்கு

இ) நண்பனே ஈ) நண்பனுடன்

**(ஈ) கீழே தரப்பட்ட வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. நாம் தீய பழக்கங்களை **<u>அறவே</u>** ஒழிக்க வேண்டும்.

அ) முற்றிலும் ஆ) எல்லோரும்

இ) எப்போதும் ஈ) தீரவே

2. பண்டைக்காலத்தில் குழந்தைகளுக்கு **<u>நிலாவைக்</u>** காட்டி உணவை ஊட்டினார்கள்.

அ) **<u>அம்புலியைக்</u>** ஆ) பகலவனைக்

இ) மேகத்தைக் ஈ) வானரங்களைக்

3. கங்காரு ஒரு **<u>விநோதமான</u>** மிருகம்.

அ) மிகப்பெரிய ஆ) சாதுவான

இ) விந்தையான ஈ) கொடூரமான

4. நமது உடல் ஓய்வு பெற போதியளவு **<u>உறக்கம்</u>** அவசியம்.

அ) உடற்பயிற்சி ஆ) நித்திரை

இ) சத்துணவு ஈ) உற்சாகம்

5. மாலையில் நான் என் **<u>நண்பனுடன்</u>** சேர்ந்து விளையாடுவேன்.

அ) உறவினருடன் ஆ) தோழருடன்

இ) பெற்றோருடன் ஈ) ஆசிரியருடன்

**(உ) முதல் வாக்கியத்தில் கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட வினைச்சொல்லை அதன் கீழுள்ள வாக்கியத்தின் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி தரப்பட்ட இடைவெளிக்குள் எழுதுக.**

1. அம்மாவைக் கண்டதும் மாலாவின் முகம் **மலர்ந்தது.**

   அம்மாவைக் காணுகிற போதெல்லாம் அவள் முகம் ____________________.

2. நான் சென்ற வருடம் விடுமுறைக்கு இலங்கைக்குச் **சென்றேன்.**

   தம்பி அடுத்த வருட விடுமுறைக்கு இந்தியாவுக்குச்

   ____________________________.

3. நேற்றைய மிகுந்த சத்தத்துடன் காற்று பலமாக **வீசியது.**

   நாளையும் காற்று பலமாக ____________________________.

4. கடந்த வருட விளையாட்டுப் போட்டியில் கண்ணன் ஓட்டப் பந்தயத்தில் **பங்குபற்றினான்.**

   அடுத்த வருட விளையாட்டுப் போட்டியில் பரதன்

   ____________________________.

5. சென்றவருடம் மதி பத்தாம் வகுப்பிலே **படித்தாள்.**

   அடுத்தவருடம் கலா நாலாம் வகுப்பிலே ____________________.

(10 புள்ளிகள்)

**(ஊ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தேரிந்தெடுத்துத் தரப்பட்ட சிறுகதையை பூர்த்தி செய்க.**

| | | | |
|---|---|---|---|
| நண்பராக | பெருமை | கருத்துகளை | பாடல்களை |
| பின்பற்றலாம் | ஐயமில்லை | மனப்பாடம் | தமிழ்நாட்டில் |
| சிறப்பாக | வாழ்ந்தார் | காலம் | உள்ளவரை |
| உலகம் | புலவர் | | |

## ஔவையார்

ஔவையார் என்ற பெயரை அறியாத சிறுவர்களோ, பெரியவர்களோ இருக்கமாட்டார்கள். அவர் (1) ____________________ வாழ்ந்த பெண் புலவர் ஆவார். அவரைப்பற்றி நிறைய கதைகள் உள்ளன. ஔவையார் பல (2) ____________________ பாடியுள்ளார்.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள் ஆகிய நூல்களை இயற்றியவர். அதியமானின் (3) ____________________ வாழ்ந்த ஔவையார். அதியமான் கொடுத்த நெல்லிக்கனியை உண்டதால் அவர் நீண்ட (4) ____________________ வாழ்ந்தார் என்று கூறுவர். அவருடைய நூல்களும் பாடல்களும் தமிழுக்கு (5) ____________________ அளிக்கின்றன.

பெரிய நீதி நூல்களில் காணப்படும் (6) ____________________ எல்லாம் எளிமையான முறையில் தம் பாடல்களில் எழுதியுள்ளார். அவருடைய பாடல்கள் (7) __________________ செய்வதற்கு மிகவும் இலகுவானவை. அத்துடன் அவர் கூறிய கருத்துகளை மக்கள் சுலபமாக (8) ____________________ . எனவே நாம் அவருடைய கருத்துப்படி வாழ்ந்தால் நம் வாழ்க்கை (9) ____________________ சிறப்பாக அமையும். உலகம் உள்ளவரை அவருடைய நூல்கள் யாவும் தமிழுக்குப் பெருமையும் சிறப்பும் தரும் என்பதில் (10) ____________________ .

(20 புள்ளிகள்)

(எ) கீழேயுள்ள படத்தொடரைக் கவனமாகப் பார்த்து, கருத்தை விளங்கி தரப்பட்ட ஐந்து (5) சொற்களுக்கு பொருத்தமான வசனங்களை எழுதுக.

குறிப்பு: மிகக் குறைந்தது 7 சொற்கள் கொண்ட வசனமாக இருக்கவேண்டும்.



1. மரம் :

______________________________________________

______________________________________________

______________________________________________

2. சிறுவர்கள் :

______________________________________________

______________________________________________

______________________________________________

**3.** பேசுகிறார்கள் :

________________________________________

________________________________________

________________________________________

**4.** பூக்கள் :

________________________________________

________________________________________

________________________________________

**5.** உடற்பயிற்சி :

________________________________________

________________________________________

________________________________________

(15 புள்ளிகள்) [ ]

ஏ) குறைந்தது 40 சொற்களில் கீழே தரப்பட்ட தலைப்பைப் பற்றி எழுதுக.

(புள்ளிகள்: 15)

**நான் விரும்பிக் கற்கும் பாடம்**